TC- 135

**070/DM/19**

| Register Number | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|

# DEPARTMENTAL EXAMINATIONS

# TAMIL NADU MARITIME BOARD TEST – HIGHER GRADE

(With Books)

Maximum Time : 2.30 hours Maximum Marks : 100

## ***IMPORTANT INSTRUCTIONS***

## DESCRIPTIVE TYPE

விரிவான விடையளிக்கும் வகை வினாத்தாள்

**Read the following instructions carefully before beginning to answer the questions.**

வினாக்களுக்கு விடையளிக்க தொடங்கும் முன்பு கீழ்க்கண்ட அறிவுரைகளை கவனமாக படிக்கவும்.

1. Answers in excess of the prescribed number of questions appearing at the end of the answer book will not be valued.

   விடைகளை குறிப்பிட்டுள்ள எண்ணிக்கைக்கு அதிகமாக எழுதியிருப்பின், விடைத்தாளின் இறுதியில் உள்ள அதிக எண்ணிக்கையிலான விடைகள் மதிப்பீடு செய்யப்படாது.

2. Answer should be in brief and to the point and need not be a verbatim reproduction of printed pages. (Applicable for tests to be answered "with books" only).

   விடைகள் சுருக்கமாகவும், வினாவிற்கு உரிய அளவிலும் இருக்க வேண்டும். புத்தகத்தில் உள்ளவற்றை அப்படியே வார்த்தைக்கு வார்த்தை திரும்ப எழுதக் கூடாது. (இக்குறிப்பு புத்தகங்களுடன் எழுதும் தேர்விற்கு மட்டும் பொருந்தும்)

3. In case of doubt, English version is the final.

   வினாக்களில் சந்தேகமிருப்பின் ஆங்கில வடிவில் கொடுக்கப்பட்டுள்ள வினாக்களே இறுதியானது.

**Answer any six questions. (Each question carry 4 marks)** **(6 × 4 = 24)**

**ஏதேனும் ஆறு வினாக்களுக்கு விடையளிக்க. (ஒவ்வொரு வினாக்களுக்கும் 4 மதிப்பெண்கள்)**

1. How to repay the capital with interest, as per Tamil Nadu Maritime Board Act 1995?

   தமிழ்நாடு கடல்சார் வாரிய சட்டம் 1995ன் படி, எவ்வாறு முதலீட்டினை வட்டியுடன் திரும்ப செலுத்துவது?

2. Indian vessel arrives a Minor Port in Tamil Nadu. Is it mandatory to report her arrival under Indian Ports Act 1908? Discuss.

   தமிழ்நாட்டின் சிறுதுறைமுகத்திற்குள் இந்திய கப்பல் வருகிறது. அக்கப்பலின் வருகை குறித்த அறிக்கை இந்திய துறைமுகச் சட்டம் 1908ன் கீழ் கட்டாயமாகுமா? விவாதிக்க.

**[Turn over**

3. Define "Special Marks" and mention the locations it can be used.

வரையறு ''சிறப்பு குறியீடுகள்'' மற்றும் அதனை பயன்படுத்த முடியும் இடத்தினையும் குறிப்பிடுக.

4. Define the following under Merchant Shipping Act 1958.

(a) Recruitment and Placement Service

(b) Seafarer.

வணிக கப்பல் போக்குவரத்து சட்டம் 1958–ன் படி, கீழ்காண்பனவற்றை வரையறு.

(அ) ஆட்சேர்ப்பு மற்றும் வேலைவாய்ப்பு சேவை

(ஆ) மாலுமி.

5. Owner of a mechanised steel boat at Rameswaram, applied for Harbour Craft License and one each of its crew members applied for issue of Certificate of Competancy for Engine Driver and Serang. The Harbour Craft was inspected and license issued. Examination was conducted and Certificate of Competancy for Engine Driver and Serang were also issued. From the above activity, calculate the revenue to Tamil Nadu Maritime Board.

இராமேசுவரத்திலுள்ள இயந்திர எஃகு படகு உரிமையாளர், துறைமுக மரக்கல உரிமம் பெறுவதற்கு விண்ணப்பித்து, அதில் கப்பல் ஊழியர்களான ஒரு என்ஜின் டிரைவர் மற்றும் ஒரு செராங்கிற்கான தகுதி சான்றிதழினை அளிக்க விண்ணப்பித்துள்ளார்கள். துறைமுக மரக்கலம் ஆய்வு செய்து உரிமம் வழங்கப்பட்டது. தேர்வு நடத்தப்பட்டு என்ஜின் டிரைவர் மற்றும் செராங்கின் தேர்ச்சிக்கான சான்றிதழும் வழங்கப்பட்டது. மேற்காணும் நடவடிக்கையில், தமிழ்நாடு கடல்சார் வாரியத்திற்கான வருவாயினைக் கணக்கிடுக.

6. Mention the period of incubation in respect of quarantinable diseases.

தொற்றுநோய் பீடித்திருக்கும் காலத்தினைக் குறிப்பிடுக.

7. Mention the revenue derived out of Indian Ports Act 1908 in Tamil Nadu.

இந்திய துறைமுகச் சட்டம் 1908–ன் படி, தமிழ்நாட்டிற்கு வருவாய் எவ்வாறு பெறப்படுகிறது?

8. Explain the Temporary and Preliminary Notices to Mariners.

கடல்வழி மாலுமிகளுக்கான தற்காலிக மற்றும் முதல் தகவல் அறிவிப்புகள் குறித்து விளக்குக.

**Answer any six questions. (Each question carry 6 marks)** **$(6 \times 6 = 36)$**

**ஏதேனும் ஆறு வினாக்களுக்கு விடையளிக்க. (ஒவ்வொரு வினாக்களுக்கும் 6 மதிப்பெண்கள்)**

9. M/s XYZ company has been allotted Coastal Land of 1 Square Kilo metres (Outside Port Limits) in Kancheepuram District, for construction of a Pump House at a cost of Rs. 10 Crores to discharge treated effluent from their industry into sea. The Cost of laying Discharge Pipeline into sea is Rs. 5 Crores. What are the fees payable to Tamil Nadu Maritime board and agreements to be entered on?

திருவாளர்கள் XYZ கம்பெனிக்கு காஞ்சிபுரம் மாவட்டத்தில், கடற்கரை நிலம் 1 சதுர கி.மீ. (துறைமுக எல்லைகளுக்கு வெளியே) ஒதுக்கீடு செய்யப்பட்டு, அப்பகுதியில் பம்ப் ஹவுஸ் கட்டுமானத்திற்காகவும், தொழிற்சாலைகளிலிருந்து பதப்படுத்தப்பட்ட கழிவுகளை வெளியேற்றுவதற்கு குழாய்கள் அமைப்பதற்கும் முறையே ரூ. 10 கோடி மற்றும் ரூ. 5 கோடியில் திட்டமிட்டுள்ளது. இதில் தமிழ்நாடு கடல்சார் வாரியத்திற்கு செலுத்த வேண்டிய கட்டணங்கள் மற்றும் எந்தெந்த ஒப்பந்தங்கள் நடைமுறைப்படுத்தப்பட வேண்டும்.

10. Define the following as per Indian Ports Act 1908.
(a) Coasting Vessel
(b) Sea going vessel
(c) Telegraph vessel.
இந்திய துறைமுகச் சட்டம் 1908–ன் படி கீழ்காண்பனவற்றை வரையறு.
(அ) உள்நாட்டுக் கப்பல்
(ஆ) கடலில் செல்லும் கப்பல்
(இ) தந்தி கப்பல்.

11. What are the functions of Seaman employment Offices in India?
இந்தியாவில் கடலோடி வேலைவாய்ப்பு அலுவலகங்களின் செயல்பாடுகள் யாவை?

12. If a ship arrives with uncremated remains, what are the procedures to be followed as per Indian Port Health Rules 1955.
இந்திய துறைமுக நல்வாழ்வு விதிகள் 1955ன் படி கப்பல் வரும் போது அடக்கம் செய்யப்படாத உடலை கையாள்வதற்கான நடைமுறைகள் யாவை?

13. Mention the Services provided by Tamil Nadu Maritime Board for private/participation.
தனியார் பங்களிப்புக்காக தமிழ்நாடு கடல்சார் வாரியம் வழங்கிய சேவைகளைக் குறிப்பிடுக.

14. Mention and explain in brief the systems of Storm Warning Signals.
புயல் எச்சரிக்கை குறியீடுகளின் முறைகளைக் குறிப்பிட்டு மற்றும் விவரி.

15. How do your number and carve the number of a Harbour Craft as per rules in Tamil Nadu?
தமிழ்நாட்டின் மரக்கல விதிகளின்படி, மரக்கல எண் மற்றும் அதன் பதிவுகள் பற்றி விவரி.

**Answer any FOUR questions. (Each question carry 10 marks)** **(4 × 10 = 40)**
**ஏதேனும் நான்கு வினாக்களுக்கு விடையளிக்க. (ஒவ்வொரு வினாக்களுக்கும் 10 மதிப்பெண்கள்)**

16. How to apply the money in General Account of the Board as per Tamil Nadu Maritime Board Act 1995?
தமிழ்நாடு கடல்சார் வாரிய சட்டம் 1995ன் படி, வாரியத்தின் பொதுக் கணக்குப் பணத்தை எவ்வாறு பயன்படுத்த வேண்டும்?

17. What are regulations for Safety of Ships Laid up in the Minor Ports in Tamil Nadu?
தமிழ்நாட்டில் உள்ள சிறுதுறைமுகங்களில், நிறுத்தி வைக்கப்பட்டுள்ள கப்பல்களின் பாதுகாப்புக்கான கட்டுப்பாடுகள் என்னென்ன?

18. A sailing vessel was constructed at Cuddalore Port with Length — 24 metres, GRT 498, NRT 300, Deadweight 450 Metric Tonnes and launched on 01.08.2017. The vessel was brought to the berth on 02.08.2017 and made entry to the Port. The vessel loaded 405 Metric tonnes Limestone and sailed on 10.08.2017. The vessel reached Pamban channel on 17.08.2017 and crossed the channel on the same day and proceeded to her next destination Mumbai Port. Calculate the revenue to Tamil Nadu Maritime Board.
கடலூர் துறைமுகத்தில் கட்டப்பட்ட பாய்மரக் கப்பலின் நீளம் 24 மீட்டர், பதிவு செய்யப்பட்ட மொத்த எடை – 498, பதிவு செய்யப்பட்ட நிகர எடை – 300, நிறைபார எடை – 450 மெட்ரிக் டன்கள் கொண்டு 01.08.2017 அன்று கடலில் மிதக்க விடப்பட்டது. 02.08.2017 அன்று அந்தக் கப்பல் தோணித் துறைக்குக் கொண்டு வரப்பட்டு, நுழைவுச் சான்று வழங்கப்பட்டது. அந்த கப்பலில் 405 மெட்ரிக் டன்கள் சுண்ணாம்பு ஏற்றப்பட்டு 10.08.2017 அன்று கடல்வழியாக புறப்பட்டது. 17.08.2017 அன்று அக்கப்பல் பாம்பன் கால்வாய் வந்தடைந்து, அக்கால்வாயை அதே நாளில் கடந்து, அடுத்த இலக்கான மும்பை துறைமுகத்தினை நோக்கிச் சென்றது. இதில் தமிழ்நாடு கடல்சார் வாரியத்திற்கான வருவாயினைக் கணக்கிடுக.

19. M.V.MANDAKINI, a bulk carrier GRT 35450, NRT — 22500, Dead Weight — 47000, arrived Cuddalore Port on 01.09.2017 for discharge of Coal — 45658 Metric tonnes. Vessel commenced discharge at anchorage through barges on 01.09.2017 at 1300 hrs onwards. Vessel completed discharge on 10.09.2017 at 1600 hrs and sailed to Chennai Port. The quantity of cargo discharged as per the draft survey is 45500 Metric Tonnes. Cargo Receiver has taken port land for rent to an extent of Length — 190 metres, Width — 190 metres from 01.09.2017 for stocking coal. Evacuated the cargo completely from port land on 30.09.2017. Three self-Propelled Mechanised Barges of Length 70 metres. were engaged for bringing coal from the mother vessel and made 50 trips each. Calculate the revenue to Tamil Nadu Maritime Board.

எம்.வி. மந்தாகினி என்ற மொத்த சரக்குக் கப்பல் பதிவு செய்யப்பட்ட மொத்த எடை – 35450, பதிவு செய்யப்பட்ட நிகர எடை – 22500, நிறைபார எடை – 47000 கொண்டு கடலூர் துறைமுகத்தினை 01.09.2017 அன்று வந்தடைந்தது. 45658 மெட்ரிக் டன்கள் கொண்ட நிலக்கரி இறக்குமதி அனுமதி பெற்றது. நங்கூரமிட்ட அக்கப்பலிருந்து 01.09.2017 அன்று 1300 மணியளவில் சரக்கு இறக்குமதி ஆரம்பித்து பரிசல்கள் (Barge) மூலம் தோணித்துறை கொண்டு வரப்பட்டது. நிலக்கரி இறக்குமதி 10.09.2017 அன்று 1600 மணியளவில் முடிவுற்று, சென்னை துறைமுகத்திற்கு சென்றது. வரைவுக் கணக்கெடுப்பின்படி வெளியேற்றப்படும் சரக்குகளின் அளவு 45500 மெட்ரிக் டன்களாகும். துறைமுக நிலத்தில் 190 மீட்டர் நீளமும், 190 மீட்டர் அகலமும் கொண்ட துறைமுக நிலத்தில் நிலக்கரி 01.09.2017 முதல் இருப்பு வைக்கப்பட்டது. 30.09.2017 அன்று துறைமுக நிலத்திலிருந்து நிலக்கரியை முழுமையாக அகற்றினார். 70 மீட்டர் நீளமுள்ள மூன்று சுய இயந்திர கலன்கள், நங்கூரமிட்ட கப்பலில் இருந்து நிலக்கரியைக் கொண்டு வரப்பட்டு ஒவ்வொன்றும் தலா 50 பயணங்கள் செய்தன. இதில் தமிழ்நாடு கடல்சார் வாரியத்தின் வருவாயினைக் கணக்கிடுக.

20. Define the following under International Ship and Port Facility Security Code.

(a) Port Facility Security Officer (2)

(b) Security Level 3 (2)

(c) Declaration of Security (2)

(d) Actions taken in Security Level 3. (4)

சர்வதேச கப்பல் மற்றும் துறைமுக வசதி பாதுகாப்புக் குறியீட்டின்படி, கீழ்க்காண்பனவற்றை வரையறு.

(அ) துறைமுக வசதி பாதுகாப்பு அதிகாரி (2)

(ஆ) பாதுகாப்பு நிலை 3 (2)

(இ) பாதுகாப்பு அறிவிப்பு (2)

(ஈ) பாதுகாப்பு நிலை 3 மட்டத்தில் எடுக்கப்பட்ட நடவடிக்கைகள். (4)

---